செ.வெ.எண்:08 நாள்: 04.09.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் பிரதிவாரம் தோறும் திங்கள் கிழமைகளில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் மனுக்கள் பெறப்பட்டு வந்தது. தற்போது கொரோனா நோய் காரணமாக பொதுமக்கள் அதிகம் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு 144 தடை உத்தரவு அமலில் உள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் எதிர்வரும் (07.09.2020) திங்கள் கிழமை தோறும் காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை இணையவழி (Online) காணொளி காட்சி வாயிலாக பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரை நேரடியாக தொடர்பு கொண்டு கோரிக்கை மனுக்கள் குறித்து தெரிவிக்க ஏதுவாக அரியலூர் மாவட்ட இணைய தள முகவரி (https://ariyalur.nic.in)-ல் கூகுள் மீட் (Google Meet) ற்கான இணைப்பு கொடுக்கப்படும். மேற்படி இணைப்பில் சென்று பொதுமக்கள் தங்கள் இல்லத்தில் இருந்தே நவீன கைபேசி (Smart Phone) மற்றும் இணையதள வசதி கொண்ட மடிக்கணினி (Laptop) அல்லது கணிப்பொறி (Computer) வாயிலாக பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் இணையவழி வசதி இல்லாத பொதுமக்கள் தங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செயல்பட்டுவரும் பொது சேவை மையங்களின் மூலம் தங்களது கோரிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நேரடியாக தெரிவிக்கலாம்.

மேற்படி பொதுமக்கள் கோரிக்கைகளில் முதியோர் உதவித்தொகை மற்றும் இதர உதவித்தொகைகள் குறித்தும், பட்டா மாற்றம் குறித்தும் ஏற்கனவே இணையவழி மூலமாக தான் மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன. ஆகவே இதுதொடர்பான கோரிக்கை குறித்த மனுக்களை எதிர்வரும் (07.09.2020) திங்கள்கிழமை நடைபெறும் இணையவழி பொதுமக்கள் குறைதீர்க்கும் நாளில் பதிவுகள் செய்யப்பட வேண்டாம் எனவும், மேற்படி கோரிக்கைகளை அதற்கான இணையதளத்தில் பதிவுகள் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொதுமக்கள் கோரிக்கை மனு அளிக்க வரும் போது முககவசம் கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டும் எனவும் சமூக இடைவெளியினை கடைபிடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**